## 2019–ம் ஆண்டு ஜுலை மாதம் நகராட்சி அலுவலகத்தில் நடைப்பெற்ற திண்டிவனம் நகர்மன்றத்தின் சாதரணக் கூட்ட நடவடிக்கைகள்

**முன்னிலை :-**

**திரு. கோ. அசோக்குமார்,**

**தனி அதிகாரி,**

**திண்டிவனம் நகராட்சி**

# மன்ற பொருள்

1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 04.05.2017 மற்றும் அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 13.10.2017–ன் படி திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்கிடங்கல் கிராமம் – ச.எண். 226/3எ, 226/3சி பகுதி, 1.93 ஏக்கர் (அ) 84070.80 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள **ஸ்ரீ விநாயகர் நகர் "சி பிளாக்"** அனுமதியற்ற மனைப்பிரிவின் உரிமையாளர் மனைகளை வரன்முறைப்படுத்த ஆன்லைனில் விண்ணப்பித்ததை தொடர்ந்து விழுப்புரம் மண்டலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித நடவடிக்கைகள் ந.க.எண். 6061/2019/விம, நாள்.10.01.2019–ல் திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிடங்கல் கிராமம் ச.எண். கிடங்கல் கிராமம் – ச.எண். 226/3எ, 226/3சி பகுதியில், 1.93 ஏக்கர் (அ) 84070.80 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள **ஸ்ரீ விநாயகர் நகர் "சி பிளாக்"** அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ / ந.ஊ.உ.இ (வி.ம) எண். (R)90/2019 என எண்ணிடப்பட்டு (தன்னிச்சையாக) மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**மனைப்பிரிவு ஒதுக்கீடு விபரம்**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு மொத்த பரப்பளவு | – | 1.93 ஏக்கர் (அ) 84070.80 ச.அடி |
| மொத்த மனைகள் | – | 38 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | – | 19 |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | – | 19 |

**பொது ஒதுக்கீடு**

பூங்கா – I (மனை எண் 17) = 1693.65 ச. அடி.

பூங்கா– II (மனை எண் 18) = 1876.00 ச. அடி.

மொத்தம் = 3569.65 ச.அடி(விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவில் 10.05 %)

மேற்படி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது.

மேற்படி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளமனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணங்கள் அதாவது மனை எண்கள் 1 முதல் 6, 10, 13, 15, 16, 19, 19எ, 21எ, 33 முதல் 35 ஆகிய 16 மனைகளின் பரப்பளவு 1 சதுர மீட்டருக்கு ரூ. 75/– வீதம் 2964 சதுர மீட்டருக்கு ரூ.222300/– மனைபிரிவு உரிமையாளரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.மேலும் வளர்ச்சி கட்டணம் 1 ச.மீட்டருக்கு ரூ. 250.00/– வீதம் ஆக 2964 ச. மீட்டருக்கு ரூ.741000/– நகராட்சி கருவூலத்தில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்த பரிந்துரைத்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமை கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தினை நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1531/2019/எப்1)

2.இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண்.1670/2010/இ1 நாள்.10.08.2017 தேதியபணி உத்திரவின்படி M/S M.H.T எஞ்சினியரிங் நிறுவனத்திற்கு திண்டிவனம் நகராட்சி எரிவாயு தகனமேடை பராமரிப்பு பணிகளுக்காக 10.08.2017 தேதி முதல் வழங்கப்பட்டு தொடர்ந்து ஒப்பந்த நீட்டிப்பு வழங்கப்பட்டு தொடர்ந்து பராமரிப்புபணிகள் செய்து வருகிறது. தற்போது 09.08.2019 உடன் ஒப்பந்தம் காலாவதியாக உள்ளது. அந்நிறுவனம் நல்லமுறையில் பராமரிப்பு பணிகளை செய்து வருவதாக துப்புரவு அலுவலர் சான்றளித்திருப்பதாலும் குறைந்த கட்டணத்தில் பிரேதங்களை எரியூட்டி பொதுமக்கள் நல்லமுறையில் பயனடைந்து வருவதாலும் 10.08.2019 முதல் 09.08.2020 வரை மேலும் ஓராண்டு காலத்திற்கு தற்போது வழங்கப்ப்ட்டு வரும் அதே கட்டண விகிகிங்களில் ஒப்பந்த நீட்டிப்பு செய்து கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1670/2015/எச்1)

3. திண்டிவனம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–18ன் கீழ் முருங்கம்பாக்கத்தில் புதியயாக திறந்த வெளிகிணறு அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்தரவு திருமதி.ஆர்.சாந்தி அவர்கள் வழங்கப்பட்டது.மேற்படி பணியினை முழுமையாக முடிக்கப்படாமல் உள்ளது. இதுகுறித்து பலமுறை நேரிலும் கடிதம் மூலமும் பணியினை முடிக்குமாற தெரிவித்தும் பணியினை முடிக்கப்படவில்லை. மேலும் இது குறித்து எவ்வித பதிலும் அளிக்கப்படவில்லை.

எனவே, மேற்படி பணியினை ரத்து புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை முடிக்கவும், ஒப்பந்ததாரர் திருமதி.ஆர்.சாந்தி அவர்களை ஒப்பந்ததாரர் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வழங்கப்பட்ட வேலை உத்தரவை ரத்து செய்து மறுஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை முடிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

4. இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் 2015–16ம் ஆண்டில் மொத்தம் 11 சமுதாய கழிப்பறைகள் அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கிடங்கல்–2 சமுதாய கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்ததாரர் திரு.டி.அமுல்ராஜ் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது. அதனை மேற்படி

ஒப்பந்ததாரர் மேற்படி பணியினை பாதி வரையில் முடித்துவிட்டு மீதமுள்ள பணியினை முடிக்காமல் உள்ளது குறித்து பலமுறை கடிதமும் தொலைபேசி வாயிலாகவும் தெரிவித்தும் இதுநாள் வரையில் முடிக்கப்படவில்லை.

எனவே, மேற்படி ஒப்பந்ததாரருக்கு வழங்கிய ஒப்பந்தத்தை ரத்து செய்து மீதமுள்ள பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி பணிமுடிக்கவும், ஒப்பந்ததாரர் திரு.டி.அமுல்ராஜ் அவர்களை ஒப்பந்ததாரர் பட்டியலிருந்து நீக்கம் செய்யவும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1 . மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி வழங்கப்பட்ட வேலை உத்தரவை ரத்து செய்து புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணியை முடிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

5. இந்நகராட்சிக்குட்பட்ட சலவாதி சாலையில் அமைந்துள்ள உரக்கிடங்கு மையத்தில் பழைய மக்கும் குப்பை முற்றம் ( windbar ) கட்டிடத்தில் புதியதாக GI Sheet அமைக்க தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1 . மன்றம் அனுமதிக்கலாம்.

6. இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரியும் திருமதி.மரியம்மாள்/சுப்ரமணி என்பவர் தன்னுடைய மாமியாரின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், குழந்தைகளை அருகிலிருந்து கவனிக்க வேண்டியுள்ளத்தாலும், திண்டிவனம் நகராட்சியிலிருந்து அரக்கோணம் நகராட்சிக்கு பணிமாறுதல் கோரி விண்ணப்பித்துள்ளார். மேற்படி பணியாளரை இந்நகராட்சியில் இருந்து அரக்கோணம் நகராட்சிக்கு பணிமாறுதல் செய்ய கோரும் விண்ணப்பத்தை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் வேலூர் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1635/2019/எச்1)

7.திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் இருக்கும் தெருவிளக்குகள்(குழல் விளக்கு, சோடியம் ஆவிவிளக்கு CFL விளக்குகள் மற்றும் உயர்கோபுர மின்விளக்குகள்) அனைத்தும் பழுதுநீக்கம் செய்தல் மற்றும் பராமரித்தல் பணியினை எம்.எஸ்.ராம் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கான ஒப்பந்தக்காலம் ஜீன் 2019–யுடன் முடிவடைந்துவிட்டது.மேலும் மேற்படி நிறுவனத்திற்கே ஜீலை–2019 முதல் செப்டம்பர் – 2019வரை பணிநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி தெருவிளக்கு பழுதுநீக்கம் மற்றும் பராமரித்தல் பணிக்கு நகராட்சிக்கு நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர ரூ.46.34 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கும் பணிக்குரிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1 . மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்தரவு வழங்கும் வரை ராம் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

8.இந்நகராட்சியில் சொத்துவரி, குடிநீர்கட்டணம்,காலிமனைவரி,தொழில்வரி, திடக்கழிவு பயன்பாட்டு கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள் (கடை வாடகை, குத்தகை இனங்கள் மற்றும் இதர இனங்கள்) ஆகியவைகளை வசூல் செய்யும்போது காசோலையாக பெறப்படும் சூழ்நிலைகளில் அக்காசோலைகளை காசாக்கப்பட சம்மந்தப்பட்ட வங்கிக்கு அனுப்பிய பிறகு அவ்வங்கியின் சம்மந்தப்பட்ட கணக்குகளின் காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை இல்லாமல் திரும்ப வந்துவிடுகிறது (uncashed cheques) இதனால் இத்தகைய காசோலைகளுக்கு அபராத தொகை வசூலிக்கப்பட வேண்டும் என புதிய கணக்கு கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பின்ரும் தொகைகளுக்கு கேற்ப அபராத கட்டணம் வசூலிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | முதல் | வரை | அபராதத் தொகை |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | 1.00 | 1000.00 | 100.00 |
| 2. | 1001.00 | 2000.00 | 200.00 |
| 3. | 2001.00 | 5000.00 | 300.00 |
| 4. | 5001.00 | 10000.00 | 400.00 |
| 5. | 10000க்கு மேல் | – | 500.00 |

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1236/19.A4)

9.இந்நகராட்சிக்குட்பட்ட இராஜாங்குளத்தினை சுற்றி உள்ள தடுப்பு வேலிகள் சேதமடைந்து இருப்பதால் அதன்வழியாக சென்று இரவு நேரங்களில் சிலர்அசுத்தம் செய்து வருகின்றனர். எனவே அதனை சரிசெய்யுமாறு திண்டிவனம் சார் ஆட்சியரின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ளார்கள்.

எனவே இராஜாங்குளத்தினை சுற்றி உள்ள பழுதடைந்துள்ள தடுப்பு வேலைகளை சரிசெய்ய தோராய செலவினம் ரூ.100000/–த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

10.இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளவாரி வாய்க்காலில் இருந்து இராஜாங்குளத்திற்கு செல்லும் மழைநீரினை சுத்தப்படுத்தி மணல், செங்கல் ஜல்லி, கிரில் மற்றும் சல்லடை தடுப்பணை ஆகியவை அமைத்து சுத்தமான

மழைநீரினை (Rain water filtration) இராஜாங்குளத்திற்கு செல்வதற்கு பணிகளை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.450000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

11. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1ல் அமைந்துள்ள பொன்னிஅம்மன் நகரில் சாலை வசதிகள் இல்லாத காரணத்தால் அவ்விடத்தில் புதியதாக தார்சாலை அமைக்க தோராய மதிப்பீடு ரூ.575000/–க்கு மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு –

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.